## தோட்டக்கலை துறை மூலம் கிராமப்புற இளைஞர்களுக்கு குறுகிய கால திறன் மேம்பாட்டு பயிற்சி

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களான நுண்ணீர் பாசனம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், மானாவாரி பகுதி மேம்பாடு, தேசிய தோட்டக்கலை இயக்கம் ஆகிய திட்டங்களில் நுண்ணீர் பாசன அமைப்புகள் நிறுவுதல், நிழல்வலைக்குடில்கள் அமைத்தல், பசுமைக்குடில் அமைத்தல் போன்ற தொழில்நுட்பம் தெரிந்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வசதிகள் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது. மேலும் இத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் அரசு தோட்டக்கலை பண்ணைகள் மற்றும் பூங்காக்களிலும் தோட்டங்கள் வடிவமைத்தல், புல் தரை அமைத்தல் போன்ற பணிகளில் வேலை வாய்ப்புகள் உள்ளன.

தோட்டக்கலை சார்ந்த புதிய தொழில் தொடங்குதல் மற்றும் வேலை வாய்ப்புகளில் இளைஞர்களின் ஈடுபாடு தற்போது அதிகரித்து வருகிறது. இருப்பினும் வணிக ரீதியாக தொழில் மேற்கொள்வதற்கு முறையான பயிற்சி மற்றும் உந்துதல் அவசியமாகிறது.

இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, தோட்டக்கலைத்துறை தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்துடன் இணைந்து கிராமப்புற இளைஞர்களுக்கு குறுகிய கால திறன் மேம்பாட்டு பயிற்சிகளை மாவட்டம் தோறும் வழங்கி வருகிறது.

இப்பயிற்சி குறித்த விவரங்கள், விண்ணப்பிக்கும் முறை மற்றும் விண்ணப்ப படிவங்களை இத்துறையின் இணையதளத்தில்-www.tnhorticulture.tn.gov.in அறிந்து கொள்ளலாம்.

குறைந்த பட்சம் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று, 18 வயதுக்கும் மேற்பட்ட விருப்பமுள்ள இளைஞர்கள் தாங்கள் விரும்பும் பயிற்சியில் கலந்து கொள்ள மேற்கண்ட இணையதளத்திலிருந்து விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து தோட்டக்கலை துணை இயக்குநர், மதுரை அலுவலகத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

மேலும் விவரங்களுக்கு 0452 - 2532351 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
மதுரை.

2/2

தோட்டக்கலை துணை இயக்குநர்,
மதுரை.

13.8.19 13/8/19 13/8 13/8/19